# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

# பாலர் பிரிவிற்கான விபரக் கொத்து
# Information Booklet for Palar Division


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 2 |
| போட்டிகளுக்கான பொது விதிமுறைகள் (முழுமையான விபரக்கொத்தைப் பார்க்கவும்) | |
| இணைப்பு 1 – வயதுப் பிரிவுகள், போட்டிகளின் அட்டவணை | 3 |
| இணைப்பு 2 – விண்ணப்பப் படிவம் | 4 |
| இணைப்பு 3 – கவிதை மனனப் போட்டிக்கான விளக்கம் | 6 |
| இணைப்பு 11 – கவிதை மனனப் போட்டிக்கான கவிதை | 8 |
| இணைப்பு 13 – போட்டிகளுக்கான பரிசு நன்கொடை வழங்கும் படிவம் | 9 |
| இணைப்பு 14 – போட்டிகள் பற்றிய உங்கள் கருத்தறியும் படிவம் | 10 |


**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சம்பந்தமான முக்கிய திகதிகள்:**

12 ஜுலை மாதம் 2010 – விண்ணப்ப முடிவு திகதி
14, 15, 21, 22 ஆகஸ்ட் 2010 – நியூசவுத் வேல்ஸ் மாநிலப் போட்டிகள் நடைபெறும்.
2 ஒக்டோபர் 2010 – சிட்னியில் தேசிய போட்டிகள் நடைபெறும்.
3 ஒக்டோபர் 2010 – சிட்னியில் பரிசளிப்பு விழா (நியூசவுத் வேல்ஸ் மாநிலம் + தேசிய போட்டிகள்)

## எம்முடன் தொடர்பு கொள்ள:

**முகவரி: இணைப்பாளர், தலைமையகம், தமிழ் ஊக்குவிப்புக் குழு**
Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia.
Email: asogt.tc@gmail.com Website: www.kalappai.org

**COORDINATORS:**

| | | |
|---|---|---|
| National Coodinator: | Mr. K. Narenthiranathan | **(07) 3122-1847** or **0402 026 922** |
| Sydney: | Mr. A. Nimalendran | **(02) 8824-3051** or **0419 255 625** |
| Melbourne: | Mrs. A. Yaso | **(03) 9449-7887** |
| Canberra: | Dr. K. Jeyasingham | **(02) 6293-1469** or **0411 106 944** |
| Adelaide: | Mr. Raj Srithar | **(08) 8337 4706** or **0406 628 634** |
| Queensland: | Dr. J. Senthilvasan | **(07) 3300 0848** or **0401 370 572** |
| Auckland (NZ) | Mr. A. Yogakumar | **(649) 271-4508** |
| Wellington (NZ) | Mr. M. Ramesh | **(644) 568-4235** |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2010

16 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **"புதியதோர் உலகம் செய்வோம்"** என்பதாகும். தாயகங்களிலும் புலம் பெயர் தேசங்களிலும் எம்மவர் இன்னல்கள் நீங்க, நம்பிக்கை தரும் வகையில் புதியதோர் உலகம் செய்யவேண்டிய தேவை உள்ளது என்ற கருத்தை மையமாக வைத்தே இந்த ஆண்டிற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன. எழுத்தறிவுப் போட்டிகளுடன் பேச்சுப்போட்டிகளும், கவிதை மனனப் போட்டிகளும் (குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும்) அவுஸ்திரேலிய-நியூசிலாந்து மட்டத்தில் தேசியப் போட்டிகளாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகள் முதலில் மாநில மட்டத்தில் நடாத்தப்பட்டுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெறும். மாநிலப் போட்டிகளுக்கும், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கும் வேறுவேறாகப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் நடைபெறும் 10 போட்டிகளுக்கும் **தங்கப்பதக்கங்கள்** முதற் பரிசாக வழங்கப்படும்.

சில முக்கியமான மாற்றங்களை இங்கு தருகின்றோம்:

1) **போட்டியாளர்கள் தங்கள் பிரிவில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி போட்டியாளரின் பிரிவில் நடைபெறாதவிடத்து போட்டியாளர் மேற் பிரிவில் நடைபெறும் அப் போட்டியில் பங்குபற்றலாம்.**
2) **அதிமேற் பிரிவிற்கான வயது எல்லை 12 - 14 வயது ஆகும். இளைஞர் பிரிவிற்கான வயது எல்லை 15 - 17 வயது ஆகும்.**
3) **போட்டிகளிற்கான விண்ணப்பக் கட்டணமான $5 உடன் ஒவ்வொரு போட்டிக்கான கட்டணமாக தலா $5 அறவிடப்படும்.**

<u>ஆண்டுதோறும் உங்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களைக் கொண்டு, இப்படியான சில மாற்றங்கள் செய்யப்படுவதனால், எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும்.</u> அதன் பின்னரே நீங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. இவற்றை தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத் தளத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பப் படிவம் 2 பக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பாடசாலையூடாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பப் படிவம் அவர்களின் பாடசாலையின் பிரதிநிதியால் சரிபார்க்கப்பட்டு விபரங்கள் உறுதி செய்யப்படவேண்டும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேவையான அத்தாட்சிப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்து வரவேண்டும்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் எமது சங்கத்தின் இணையத் தளமான www.kalappai.org இல் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது போட்டிகளில் மாநில, தேசிய மட்டங்களில் பங்குபற்றி உங்கள் திறமைகளைக் காண்பித்து பரிசுகளை வென்றெடுக்க எமது நல் வாழ்த்துக்கள்!

**திரு. க. நரேந்திரநாதன்**
**இணைப்பாளர்,**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2010.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு-1**

## போட்டிகளும் வயதுப் பிரிவுகளும்

| போட்டி | சாதாரண போட்டிகள் | பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|---|---|
| PP | கவிதை மனனப் போட்டி | பாலர் பிரிவு | 5 வயதின் கீழ் | 01.07.2005 க்குப்பின் |
| BP | கவிதை மனனப் போட்டி | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2004 - 30.06.2005 |
| BV | வாய்மொழித் தொடர்பாற்றல் | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2004 - 30.06.2005 |
| LP | கவிதை மனனப் போட்டி | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2002 - 30.06.2004 |
| LV | வாய்மொழித் தொடர்பாற்றல் | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2002 - 30.06.2004 |
| IV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| IW | எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| IS | பேச்சுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| SV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| SW | எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| SS | பேச்சுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| AdSW | எழுத்தறிவுப் போட்டி | அதிமேற்பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| AdSV | வாய்மொழித் தொடர்பாற்றல் | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| AdSS | பேச்சுப் போட்டி | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| YV | வாய்மொழித் தொடர்பாற்றல் | இளைஞர் பிரிவு | 15-17 வயது | 01.07.1992 - 30.06.1995 |

### விசேட போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| SpLW | விசேட எழுத்தறிவுப் போட்டி | கீழ்ப் பிரிவு | 8 வயதின் கீழ் | 30.06.2002 க்குப்பின் |
| SpAdSP | விசேட கவிதைமனனப் போட்டி | அதிமேற்பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.1995 க்குப்பின் |
| SpSA | தனிநடிப்பு | மேற் பிரிவு | 12 வயதின் கீழ் | 30.06.1998 க்குப்பின் |
| SpYA | தனிநடிப்பு | இளைஞர் பிரிவு | 12-17 வயது | 01.07.1992 - 30.06.1998 |
| SpYW | விசேட எழுத்தறிவுப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |

### குழுநிலைப் போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| AdSQ | வினாடி வினாப் போட்டி | அதிமேற் பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.1995 க்குப்பின் |
| YQ | வினாடி வினாப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |
| YD | விவாதப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |
| YT | பல்திறன் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |

**குறிப்பு:** இங்கு நிழல்ப்படுத்தப்பட்ட போட்டிகள் அனைத்தும் தேசிய நிலையிலும் போட்டியாக நடாத்தப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் மேலுள்ள அட்டவணையிலிருந்து போட்டிகள் தெரிந்தெடுக்கப்பட்டு நடாத்தப்படும். எனவே எல்லாப் போட்டிகளும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படும் சாத்தியம் இருக்காது. தேசிய நிலைப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு-2**

## விண்ணப்பப் படிவம் APPLICATION FORM

**குடும்பப் பெயர்:** …………………………….. Family Name:………………………………(in English)

**முதற் பெயர்:** …………………………………First Name:……………………………….(in English)

**பிறந்த திகதி**: …………………………………  **பிறந்த நாடு**:………………………………

**முகவரி**:……………………………………………………………………………………

**மின் அஞ்சல் முகவரி**:……………………………………………………………………....

**தொலைபேசி:** ………………………………**கையடக்கத் தொலைபேசி**:……………………

அவுஸ்திரேவியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த

திகதி: ……………………………

**நீங்கள் கற்கும் தமிழ்ப் பாடசாலை**:……………………………………………………….....

**2010 இல் பங்குபற்றும் போட்டி/போட்டிகள்:**

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்: $5.00 + (போட்டிகளின் எண்ணிக்கை) ..... x $5.00 = ……………

எமது போட்டி விதிமுறைகள் அனைத்தையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், அந்த விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதெனவும் உறுதி செய்கின்றேன். இந்த விபரம், அல்லது விபரங்கள் பிழையென அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

________________________　　　　__________________

கையொப்பம் (பங்குபற்றுபவர் / பெற்றோர்)　　　　திகதி

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

________________________　　　　__________________

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம்　　　　திகதி

## பொது விதிமுறைகள் - தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2010

1) போட்டியாளரின் வயது 01-07-2010 இல் உள்ளபடி கணிக்கப்படும்.
2) இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3) **போட்டியாளர்கள் தங்கள் பிரிவில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி போட்டியாளரின் பிரிவில் நடை பெறாதவிடத்து போட்டியாளர் தமது வயதுப் பிரிவிலும் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப் போட்டியில் பங்குபற்றலாம்.**
4) **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2009ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.**
5) **2009ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். 2009ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டி, பாடல் மனனப் போட்டி, பேச்சுப் போட்டியி ஆகியவற்றில் முதற்பரிசு (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் மீண்டும் இவ்வருடம் அதே போட்டிகளில் எப்பிரிவிலேனும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
6) அண்மையில் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 8, 12, 15, 18 வயதுக்குட்பட்டவர்கள் என நான்கு பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படும். அவர்கள் சாதராணப் பிரிவுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது என்பதை அறியத் தருகின்றோம். (மேலதிக விபரத்துக்கு 5.1ஐப் பார்க்கவும்).
7) போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (Passport or Birth certificate) தேவைப்படின் அவற்றை காண்பிக்க வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
8) 2009ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2010 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாகக் கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2010 போட்டிகளிற் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**
9) ஒவ்வொரு போட்டியாளாரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$5.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.
10) இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **12-07-2010** ற்கு முன்னர் Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

போட்டி: சரி / பிழை வயது பிரிவு: சரி / பிழை இல:............

கட்டணம்: ............... செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

குறிப்பு:..........................................................................................................

..........................................................................................................

போட்டி இணைப்பாளர்:........................................திகதி:....................................

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 3**

## கவிதை மனனப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1. **கவிதை மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)**
போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலர் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், கீழ்ப்பிரிவில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

2. **விசேட கவிதை மனனப் போட்டி - (அதிமேற் பிரிவு)**
இப்போட்டிக்கு 10 திருக்குறள்கள் பொருளுடன் கொடுக்கப்படும். பத்துக் குறள்களையும் பொருளுடன் பிளையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

3. போட்டியின் போது உச்சரிப்பு(30%), பொருளுணர்ந்து கூறுதல் (25%), சபை மரபும் ஆதிக்கமும் (30%) மனனஞ் செய்யும் திறமை (15%), ஆகியன கவனிக்கப்படும்.

4. **உச்சரிப்புத் திறன்** (30 %)
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது ஒப்புவித்தல்
     (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
   - பாலர் பிரிவுக் குழந்தைகளின் மழலைத் தமிழுக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

5. **பொருள் உணர்ந்து கூறும் திறன்** (25%),
   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திக் கவிதையைக் கூறுதல்
   - வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
   - அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல்.
   - கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும்,செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
   - சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆக்யவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
   - முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, இரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.

- ❖ முக்கியமாக கவிதையைக் கவிதை நடையில் கூறவேண்டும்.

7) **மனனஞ் செய்யும் திறன்** (15%)

- ❖ சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் கூறுதல். (கவிதை வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்.)
- ❖ சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).
- ❖ எழுத்துப் பிரதியையோ அல்லது துணைக்குறிப்பையோ பார்த்து கவிதையைக் கூறமுடியாது. இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ கவிதை வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள்(பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது.

8. **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**

- ❖ போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- ❖ நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- ❖ உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியிற் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கோ, நியூசிலாந்திற்கோ குடியேறிய திகதி ஆகிய விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.
- ❖ போட்டிகளுக்கான கவிதையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து இவற்றை பேட்டி இணைப்பாளருக்குக் காண்பிக்க வேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- ❖ விண்ணப்பக் கட்டணத்தையும் ($5.00) போட்டிக்கான கட்டணத்தையும் (ஒவ்வொரு போட்டிக்கும் $5.00) முன்கூட்டியே செலுத்தி இருத்தல் வேண்டும்.
- ❖ உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இலுந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 11**

## கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு (5 வயதின்கீழ்)

(பிறந்த திகதி: 01.07.2005 க்குப்பின் பிறந்தோர்)

## முத்தம் தா

கண்ணே மணியே முத்தம் தா!
கட்டிக் கரும்பே முத்தம் தா!
வண்ணக் கிளியே முத்தம் தா!
வாசக் கொழுந்தே முத்தம் தா!

தேனே பாலே முத்தம் தா!
தெவிட்டாக் கனியே முத்தம் தா!
மானே மயிலே முத்தம் தா!
மடியில் வந்து முத்தம் தா!

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
நூல் – "மலரும் மாலையும்"

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 13**

## போட்டிகள் பற்றிய உங்கள் கருத்து

அன்புடையீர்!
போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். உங்களது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் எதிர்காலத்தில் எமது போட்டிகளை மேலும் சிறப்பாக நடாத்த உதவும் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் கருத்துக்களை நேரடியாகத் தரவிரும்பின் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தரவும். நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம். நன்றி.

கீழேயுள்ள விடயங்களுக்குச் சரியென நீங்கள் எண்ணும் இலக்கத்தைத் தெரிக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) போட்டிகள் பற்றி வழங்கப்பட்ட விளக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2) போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட விதம்: | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3) போட்டிகளை மதிப்பிடும் விதம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4) போட்டிகளுக்கு வழங்கப்பட்ட கவிதை, பேச்சு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5) பொதுவாகப் போட்டியாளர்களின் தரம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6) போட்டியில் பெற்றோரின் ஒத்துழைப்பு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7) இப்போட்டிகளால் மாணவர்களடையும் பயன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8) மீண்டும் பங்குபற்றவுள்ள விரும்பம் | 1 | 2 | 3 | 4 | 5 |

<u>குறிப்பு:</u> 1 – மிகக்குறைவு, 2 - குறைவு, 3 - மத்திமம், 4 - நன்று, 5 - மிகநன்று.

9) போட்டியிகளிற் காணப்பட்ட குறைகள் அல்லது முன்னேற்றக்கூடிய விடயங்கள்:
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

10) நீங்கள் போட்டிகள் பற்றி வேறு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

பெயர்: ……………………………………..

தொலைபேசி: ………………………….. திகதி:………………………

(குறிப்பு: போட்டிகள் முடிந்தபின் இந்தப் படிவத்தை நிரப்பிப் போட்டி நடத்துனரிடம் கொடுக்கவும் அல்லது கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.)

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

இணைப்பு: 14

## Details for competition prizes – Tamil competitions 2010

**A) Gold medal** - தங்கப்பதக்கம் **( 10)** - Aus $300.00 per medal
1st prize winner in national competitions level
**B) Memorial Trophy / Winner's trophy ( 10 )**- Aus $175.00 per trophy & First 3 prizes
1st prize winner in any competitions at state level.
**C) First 3 prizes (23 competitions)** - Aus. $75.00 per competition
Prizes for first 3 winners of any competitions
**D) Donations for special prizes, certificates and other donations:**
**-** Your nominated amount

We honour all our donors by special mention on the prize giving ceremony souvenir.

---

## Details of your donation:

Name: ………………………………………………………….

Address: ……………………………………………………..

Phone: ………………………..(H) ……………………(O) ……………………(Mobile)

Email: ……………………………………………….

Category (one of the above):…………………………………………………

Preferred name for the Prize: ……………………………………………………………………

………………………………………………………………………………………………………..

Amount: ………………………………………………

Payment method: Cheque / Money Order / Cash

You may draw or cheque in favour of `Tamil competitions' and post it to our official address: P. O. Box 4040, Homebush, NSW 2140.

---------------------------------------- ---------------------------------------
Sponsor's signature Date